**செய்தி வெளியீடு எண். 641** **நாள்– 29.07.2010**

# செய்தி வெளியீடு 29–07–2010

## மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித் தொகை ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி – மாண்புமிகு முதலமைச்சர் ஆணை

### வருமான உச்சவரம்பும் நீக்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்யும் இயல்பான நிலையில் உள்ளவர்களை ஊக்குவிக்க திருமண நிதியுதவித் திட்டம் 1986ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மேலும் ஒரு மாற்றுத் திறனாளியை மற்றொரு மாற்றுத் திறனாளி திருமணம் செய்து கொண்டாலும் அவர்களுக்கு திருமண உதவித் தொகை வழங்கும் திட்டம் 2009ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டு சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி அறிவிப்பு செய்தார்கள். அந்த அறிவிப்பினை தொடர்ந்து அதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுவான திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் மணமகளின் பெற்றோருக்கு மட்டுமே நிதியுதவி தொகை வருமான உச்சவரம்பிற்கு உட்பட்டு வழங்கப்படுகிறது. ஆனால் மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி வருமான உச்சவரம்பு இத்திட்டத்தின் கீழ் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உதவித் தொகை திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.12,500/– ரொக்கப் பணமாகவும், ரூ.12,500/– தேசிய சான்றிதழ் பத்திரமாகவும் வழங்கப்படும். இத்திட்டத்தில் கூடுதலானோர் பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.1,22,50,000/– ஒதுக்கீடு செய்து ஆணைப் பிறப்பித்துள்ளார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.